# Knowledge and Poverty as Depicted in Individual Poems

**Dr. P. Dhanalakshmi**
*Assistant Professor, Centre for Tamil Research*
*Doak Perumathi College, Madurai*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: அக்டோபர்

வருடம்: 2025

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.17346742

**Abstract**

*Many literary works praise both the generosity of patrons and the knowledge and virtues of poets. The poems of poets celebrate the magnanimity of patrons who gave with discernment and generosity. In the history of Tamil literature, the verses composed by poets who hold an irreplaceable place beautifully reflect their deep thought, imaginative power, eloquence, humanism, and patriotism. On the one hand, poets excelled in wisdom and intellect, yet on the other hand, they often had to depend on patrons for their livelihood. "A life of hunger and scholarship" became the hallmark of poets. Although their songs extolled the generosity of kings and patrons, behind them lay hidden pains—such as the neglect of the poets' scholarship, their poverty, and helplessness. In this context, this article seeks to explain the ideas expressed in poems from the Thanippadal anthology that center around poverty.*

***Keywords:*** *Collection of Solo Poems, Scholarship, Poverty, Mental Struggle*

**References**

1. Thanippadal Thirattu – Edited by Kalaichelvi – Meenatchi Publications – First Edition, 1960.
2. Vazhviya Kalanchiyam, Volume 14 – Tamil University, Thanjavur – First Edition, 1991.
3. Purananuru – Text and Commentary – Puliyur Kesigan – Saradha Publications – First Edition, 2010.
4. Porunaratrupadai – Ki. Va. Jagannathan – Amudha Nilayam Ltd. – First Edition, 1985.
5. Thirukkural – New Commentary – Poombuhar Publications – Edition, 2010.
6. Educational Psychology – Dr. A. Meenatchisundaram – Kavyamala Publications.

# தனிப்பாடல்கள் சித்தரிக்கும் புலமையும் வறுமையும்

***முனைவர் பி. தனலெட்சுமி***
உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வு நடுவம்
டோக் பெருமாட்டி கல்லூரி, மதுரை

***ஆய்வுச் சுருக்கம்***
*இலக்கியங்கள் பலவும் புரவலர்களின் கொடைச் சிறப்பையும் புலவர்களின் புலமைத் திறம் மற்றும் மாண்புகளையும் விதந்துப் பாராட்டுகின்றன. வரிசையறிந்து வார்வழங்கிய புரவலர்களின் வள்ளல் தன்மையைப் புலவர் தம் பாக்கள் பறை சாற்றி நிற்கின்றன. தமிழ் இலக்கிய வரலாற்றில் தவிர்க்க முடியாத இடத்தைப் பெற்றுள்ள புலவர்கள் இயற்றிய பாக்கள் அவர்தம் ஆழ்ந்த சிந்தனை, கற்பனை வளம், சொல்லாற்றல், மனிதநேயம், நாட்டுப்பற்று போன்றவற்றை அழகாகப் பிரதிபலிக்கின்றன. ஒரு புறம் புலவர்கள் அறிவாற்றலில் மேன்மை பெற்றிருந்தாலும், மறுபுறம் தமது வாழ்வாதாரத் திற்காக வள்ளல்களை நாடிச் செல்ல வேண்டிய நிலையே காணப்பட்டது. பசியும் புலமையும் இணைந்த வாழ்வே அவர்களின் அடையாளமாக இருந்து வந்தது. அவர்களின் பாடல்கள் அரசர்களின் வள்ளல் தன்மையைப் புகழ்ந்தாலும், அதன் பின்னணியில் தமது புலமைத் திறம் போற்றப்படாமை, வறுமை, இயலாமை போன்ற பல்வேறு வலிகள் மறைந்திருப்பதையும் காணமுடிகின்றது. அந்த வகையில் தனிப்பாடல் திரட்டில் வறுமையையமையமிட்டு அமையும் பாடல்கள் வெளிப்படுத்தும் கருத்துக்களை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகின்றது.*

***திறவுச் சொற்கள்:*** *தனிப்பாடல் திரட்டு –புலமை – வறுமை – மனப் போராட்டம்*

## முன்னுரை

இலக்கியங்கள் பலவும் புரவலர்களின் கொடைச் சிறப்பையும் புலவர்களின் புலமைத் திறம் மற்றும் மாண்புகளையும் விதந்துப் பாராட்டுகின்றன. வரிசையறிந்து வாரி வழங்கிய புரவலர்களின் வள்ளல் தன்மையைப் புலவர் தம் பாக்கள் பறை சாற்றி நிற்கின்றன. அதே நேரத்தில் புலமையும் வறுமையும் நிறைந்த புலவர்களின் மறுபக்கத்தையும் இலக்கியங்கள் பதிவு செய்யத் தவறவில்லை. அந்த வகையில் தனிப்பாடல் திரட்டில் வறுமையை மையமிட்டு அமையும் பாடல்கள் வெளிப்படுத்தும் கருத்துக்களை எடுத்து ரைப்பதாக இக்கட்டுரை அமைகின்றது.

## புலவர்களின் பார்வையில் வறுமை

ஒருவன் தனது அடிப்படைத் தேவைகளைக் கூட நிறைவு செய்ய இயலாத நிலையே “வறுமை” எனப்படுகிறது. வாழ்வியல் களஞ்சியம், மக்கள் உயிர் வாழ உணவு, உடை, உறையுள் போன்றவை இன்றியமையாதன. அவ்வின்றியமையாதனவற்றைப் பெற முடியாத நிலையில் இருப்பவர்களை வறியோர் எனப் பொருளாதார அடிப்படையில் குறிப்பிடலாம். இன்றியமையாத விருப்பங்களை நிறைவேற்ற இயலாத நிலையே வறுமை (வாழ்வியல் களஞ்சியம், தொகுதி-14, ப:388) என்று வறுமை என்பதை வரையறை செய்கின்றது. தனிமனித மற்றும் சமூக வளர்ச்சிக்குத் தடைக்கல்லாக இருக்கும் கூறுகளுள் ஒன்றான வறுமையினை “நல்குரவு” என்று குறிப்பிடும் வள்ளுவர் “இன்மையின் இன்மையே இன்னாதது” என்றும் “இன்மை என ஒரு பாவி” என்றும் சுட்டிச் செல்கின்றார். சமூகப் பிரச்சினையாக அமையும் வறுமையின் கொடுமையினைக் காலந்தோறும் தோன்றும் இலக்கியங்கள் பதிவுசெய்து கொண்டே உள்ளன. அந்த வகையில் புலவர்கள் தமது புலமைக்குச்

சவாலாக அமைந்துள்ள வறுமையின் கொடுமையினைத் தமது பாக்களில் பதிவு செய்யத் தவறவில்லை.

***ஆடுநனி மறந்தகோடு உயர் அடுப்பின்***
***ஆம்பி பூப்பத் தேம்பு பசி உழவாப்***
***பாஅல் இன்மையின் தோலொடு திரங்கி***
***இல்லிதூர்ந்த பொல்லா வறுமுலை***
***சுவைத் தொறும் அழூஉம் தன் மகத்து முக நோக்கி***
***நீரொடு நிறைந்த ஈர்இதழ் மழைக்கண் என்***
***மனையோள் எவ்வம் நோக்கி நினைஇ***
***நிற்படர்ந்தி சினேநற் போர்க்குமண!***
***(புறநானூறு: 164)***

எனும் பெருந்தலைச் சாத்தனாரின் பாடல் வறுமையுற்ற குடும்பத்தின் அவல நிலையினைக் கண்முன் காட்சிப்படுத்துகின்றது. இவ்வாறு சங்கப்பாக்கள் பலவற்றுள் குறிப்பாக ஆற்றுப்படை நூல்களில் புலவர்களின் வறுமை மற்றும் புரவலர்களின் வள்ளண்மை பதிவு செய்யப்பட்டுள்ளன. அந்தவகையில் தனிப் பாடல்களும் வறுமையைப் பல்வேறு கோணங்களில் பதிவு செய்துள்ளன.

***சத்திமுத்தப் புலவர் என்பார் தனது நிலையை மனைவிக்கு உணர்த்து மாறுநாரையைத் தூது விடுப்பதாக அமையும் பாடலில்,***
***பேழையில் இருக்கும் பாம்பென உயிர்க்கும்***
***ஏழையாளனைக் கண்டனம் எனுமே***
***(ப:105)***

என்னும் அடிகளில் உணவும் உறைவிடமுமின்றி குளிரில் தனது குடும்பத்தினரை நினைத்து வாடும் அவர்தம் அவலநிலை சித்திரிக்கப்படுகின்றது.

***நீளத் திரிந்து உழன்றாய்***
***நீங்கா நிழல் போல***
***நாளைக்கு இருப்பாயோ***
***நல்குரவே (ப:160)***

எனும் மதுரக வியாரின் பாடல் நிழல் போல் தொடரும் வறுமையிடமே கேள்வி யெழுப்புவதாக அமைந்துள்ளது. இப்பாடல்,

**இன்றும் வருவது கொல்லோ நெருநலும்**
**கொன்றது போலும் நிரப்பு**
***(குறள்:1048)***

எனும் குறளோடு ஒப்புவைத்து எண்ணத்தக் கதாக அமைந்துள்ளது.

### வறுமைக்கு ஆட்படுவோர்

தனிப்பாடல் திரட்டில் இடம் பெற்றுள்ள பாடல் ஒன்று வறுமையின் பிடிக்கு ஆட்படுபவர்கள் என சிலரைப் பட்டியலிட்டுச் செல்கின்றது. “கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு” எனும் காலந்தோறும் நிலவிவரும் கருத்தோட்டத்திற்கு மத்தியில்,

**கவிகற்றவர்க்கும் கணிகற்றவர்க்கும் கம்மாளருக்கும்**
**ஓவி கற்றவர்க்கும் உபாத்திகளுக்கும் உயர்ந்த மட்டும்**
**குவிவைக்கும் ஓட்டர்க்கும் கூத்தாடி கட்கும் குருக்களுக்கும்**
**இவரெட்டுப் பேர் கட்கும் நீங்காத்தரித்திரமே**
***(ப:181)***

எனும் அந்தகக் கவிவீரராகவ முதலியார் எனும் புலவர் கல்வி, கலைகளில் சிறந்து விளங்குவோர் வறுமையின் பிடியில் சிக்கித் தவிப்பதைச் சுட்டிச் செல்கின்றார்.

### வறுமையுற்றோரின் மனப் போராட்டம்

மனிதனின் தேவைகள் நிறைவேறுவதில் தடை ஏற்படும் போது மனித மனம் அதனை ஏற்க இயலாமல் பாதிப்புக்கு உள்ளாகின்றது. இச்சூழலில் சரியான முடிவினை எடுக்க இயலாமல் தவிப்பிற்குள்ளாகும் மன நிலையினை உளவியலாளர்கள் மனப் போராட்டம் என்று குறிப்பிடுகின்றனர்.

ஒருகுறிக்கோளை அடைய முடியாமல் தடுக்கப்படும் நடத்தைக்கு மனப் போராட்டம் என்று பெயர். - (முனைவர் அ. மீனாட்சிசுந்தரம், கல்வி உளவியல், ப -121).

மனப் போராட்டத்தின் காரணமாக மன அழுத்தம், மனமுறிவு உள்ளிட்ட உளப் பாதிப்புகள் உண்டாகின்றன. அந்த வகையில் வறுமையில் சிக்கித் தவிக்கும் ஒருவன் உடலளவில் மட்டுமல்ல மனதளவிலும் பெரும் சவால்களைச் சந்திக்கின்றான். வறுமையின் துன்பத்தை அனுபவித்த சுந்தர கவிராயர் என்கிற புலவர், வறுமை வந்தால் என்னென்னவெல்லாம் அரிதாகி விடும் என்று பின்வரும் பாடலில் குறிப்பிடுகின்றார்.

***அன்னம் உணற்கு அரிதாம்; ஆமாறு***
***மூன்றும் அரிதாம்;***
***பள்ளம் அரிதாம் பகலின் கண்; -***
***துன்நிசியில்***
***நேயம் அரிதாகும்; நித்திரைக்கும் பாய்***
***அரிதாம்;***
***காயக்கு அரிதாம் கலை (ப:115)***

இப்பாடல் இல்லாமையால் உண்டாகும் இயலாமையில் சிக்குண்ட ஒருவரின் மன நிலையின் வெளிப்பாடாக அமைந்துள்ளது. பொருள் இல்லாதவர்களின் நிலையை

***விரித்துரைப்பதாக அமையும்***
***பாடலொன்றில்,***
***பொருள் இல்லார்க்கு இன்பம் இல்லை;***
***புண்ணியம் இல்லை; என்றும்***
***மருவுறுகீர்த்தி இல்லை; மாந்தருள்***
***பெருமை இல்லை;***
***கருதியகருமம் இல்லை; கதிபெறு***
***வழியும் இல்லை***
***பெருநிலத்திடை நடக்கும் பிணம்***
***எனப்படுவர் அன்றே (ப:206)***

என்று நடைபிணம் என புலவர் ஒருவா சுட்டிச் செல்கின்றார். இப்பாடலானது பொருளற்றவர்கள் சமூகத்தில் புறக்கணிப்பிற்குள்ளாவதால் ஏற்படுகின்ற மன அழுத்தம் அதனால் ஏற்படும் மனப்போராட்டத்தின் உச்ச நிலையை ஆகியவற்றைப் புலப்படுத்துகின்றது.

***கல்லைத் தான் மண்ணைத் தான்***
***காய்ச்சித் தான் குடிக்கத்தான்***
***கற்பித்தானா?***
***இல்லைத்தான் பொன்னைத் தான்***
***எனக்குத்தான் கொடுத்துத்தான்***
***இரட்சித்தானா?***
***அல்லைத்தான் சொல்லித்தான்***
***ஆரைத்தான் நோவத்தான் அச்சோ***
***எங்கும்***
***பல்லைத் தான் திறக்கத்தான் பதுமத்தான்***
***புவியில் தான் பண்ணினானே! (ப:55)***

எனும் இராமச்சந்திரக் கவிராயரின் பாடல் வறுமையை எதிர் கொள்ள இயலாமல் தனது நிலையை நொந்து கொள்ளும் புலவர் தம் மனகுமுறலின் வெளிப்பாடாக அமைந்துள்ளது. தன்னிடம் திறமைகள் இருந்தும் அவைமதிக்கப்படாமையும் தம்மைத் தொடர்ந்து வரும் வறுமையைக்களையும் வழியறியாமலும் தவிக்கும் சூழலில் கடவுளைப் பழிப்பதாக அமையும் இப்பாடல் உளவியலார் குறிப்பிடும் மனமுறிவு (Frustration) என்பதற்கான சான்றாக அமைந்துள்ளது. படிக்காசுத்தம் பிரான் எனும் புலவர் தமது

***அட கெடுவாய் பல தொழிலும்***
***இருக்கக்கல்வி, அதிகமென்றே***
***கற்றுவிட்டோம்***
***அறிவில்லாமல் (ப147)***

எனத் தொடங்கும் தமது பாடலில் தனது நிலைப்பாட்டைக் கேள்விக் குள்ளாக்கி

***என்னசென்ம மெடுத்துலகில்***
***இரக்கின்றோமே (ப 148)***

என்று நிறைவு செய்கின்றார். இப்பாடல் அவரது மனக்குமுறல் மற்றும் மனமுறிவின் வெளிப்பாடாக அமைந்துள்ளது.

### புலவர் தம் மனச்சான்று

வார்த்தைக்குப் பஞ்சமின்றி வார்த்தெடுக்கும் புலவர்கள் வறுமையின் பிடியில் சிக்கி உழன்றதையும், பசியில் வாடும் தமது சுற்றத்தாரின் நிலையைக் கண்ணோக்க இயலாமல் பசிப்பிணி மருத்துவரைத் தேடியலைந்ததையும், தமது புலமை மதிக்கப்படாமையும், பொய்யாகப்

புகழ்ந்தும் தனது இடர் தொடர்ந்து வந்து துன்புறுத்துவதையும், ஒருங்கே எடுத்துரைப்பதாகப் பின்வரும் பாடல் அமைந்துள்ளது.

**"குன்றுங் குழியுங்குறுகி வழி நடந்து**
**சென்று திரிவதென்றுந் தீராதோ-**
**ஒன்றுங்**
**கொடாதானைக் காவென்றுங்கோ**
**வென்றுங்கூறின்**
**இடாதோ நமக்கிவ்விடர்" (ப:45)**

அதேபோல் இராமச்சந்திர கவிராயர் என்னும் புலவர்,

**வஞ்சகர் பால் நடந்திளைத்த காலிற்**
**புண்ணும்**
**வாசல் தொறும் முட்டுண்ட தலையிற்**
**புண்ணும்**
**செஞ்சொல்லை நினைந்துருகும்**
**நெஞ்சிற் புண்ணும் (ப:56)**

என்று குறிப்பிடுவதும் புலமை புறக்கணிக்கப்பட்டமைக்குச் சான்று பகர்கின்றன. அவரே மற்றொரு பாடலில்

**கல்லாத ஒருவனை நான் கற்றாய்**
**என்றேன்;**
**காடு எறியுமறவனை நாடு ஆள்வாய்**
**என்றேன்.**
**பொல்லாத ஒருவனை நான் நல்லாய்**
**என்றேன்;**
**போர் முகத்தை அறியானைப் புலியே**
**என்றேன்;**
**மல்லாரும் புயம் என்றேன் சூம்பல்**
**தோளை;**
**வழங்காதகையனை நான் வள்ளல்**
**என்றேன்;**
**இல்லாது சொன்னேனுக்கு "இல்லை"**
**என்றான்;**
**யானும் எந்தன் குற்றத்தால் ஏகின்றேனே!**
**- (ப:54)**

என்று எல்லாரிடமும் வறுமைக்காக புலமையை தவறாகப் பயன்படுத்தி வாழும் தனது நிலையை எண்ணி வருந்துகின்றார். தாம் பொய்யாக ப்புகழ்ந்ததையும் அதன் காரணமாக ஏற்பட்ட குற்ற உணர்வில் தவிப்பதையும் இப்புலவர் தமது பாடலில் புலப்படுத்துகின்றார். இப்பாடல்கள் புலவர் தம் மனச்சான்றாக அமைந்துள்ளன.

**மாற்றுக் குரல்**

புரவலர்களின் கொடைத் தன்மையை சிறப்பிக்கும் பாடல்கள் அனைத்தும் தேர், யானை, குதிரை, பொன், ஊர் என அவர்கள் வழங்கிய பரிசில்களை விதந்து ரைக்கின்றன. அதேநேரத்தில்,

**தன்னறியளவையின் தரத் தரயானும்**
**என்னறியளவையின் வேண்டுவ**
**முகந்து கொண்டு**
**இன்மை தீரவந்தனென்**
**(பொருநராற்றுப்படை, 127-129)**

என்று மன்னன் தன்னால் இயன்றதனைத் தையும்தந்தாலும்வேண்டுவனவற்றைப்பெ பற்றுக்கொண்டுவறுமைநீங்கிவந்ததையும், தாம்பெற்றவளத்தைப் புலவர்கள்

**வல்லாங்கு வாழ்தும் என்னாது நீயும்**
**எல்லார்க்கும் கொடுமதிமனைக்**
**கிழவோயே (புறம் - 163)**

என்று அனைவருக்கும் பகிர்ந்தளித்ததையும் சங்கப்பாக்கள் எடுத்துரைக்கின்றன. இவ்வாறு கொடைத் திறனை விதந்து போற்றும் பாடல்களுக்கிடையே ஒரு புலவரின் குரல் அதனை கேள்விக்குள்ளாக்குவதாக அமைந்துள்ளது. பசிக்காக நாடி வந்தவனுக்குப் பரிசில்களுள் ஒன்றாக யானையை இராமன் என்பான் பரிச அளிக்கின்றான். வள்ளல் இராமனிடமிருந்து என்ன பரிசில் பெற்று வந்தீர்? என்று வினவும் தனது மனைவியிடம் தான் பெற்ற பரிசாகிய யானைக்குரிய வேறு பெயர்களை வேடிக்கையாகக் கூறிய பொழுது அவளும் அதை வேறு பொருள்களாக விடை பகர்ந்தாள்; முடிவில் 'கைம்மா' என்பதைக் கேட்டு வியப்பும் திகைப்பும் அடைந்து, 'யானையைக் கட்டித் தீனிபோடுவதுயார்? நமக்குச் சோறு கிடைப்பதே அரிதாக

இருக்கிறதே' என்று நினைந்து வருந்தி வாய்திறந்து பேசாமடந்தையானாள் '(பக்: 178 -179) எனும் அந்தகக்கவிவீரராகவ முதலியாரின் பாடல் வறுமையை விரட்டும் வழி தேடி வந்தவருக்கு, கிடைத்த பரிசில் சுமையாக மாறியமையை எடுத்துரைப்பதாக அமைந்துள்ளது.

## முடிவுரை

தமிழ் இலக்கிய வரலாற்றில் புலவர்கள் முக்கிய பங்கு வகித்துள்ளனர். அவர்கள் இயற்றிய பாக்கள் அவர்தம் ஆழ்ந்த சிந்தனை, கற்பனை வளம், சொல்லாற்றல், மனிதநேயம்,நாட்டுப்பற்றுபோன்றவற்றை அழகாகப் பிரதிபலிக்கின்றன. ஒருபுறம் புலவர்கள் அறிவாற்றலில் மேன்மை பெற்றிருந்தாலும், மறுபுறம் வாழ்வாதாரத்திற்காக வள்ளல்களை நாடிச் செல்ல வேண்டிய நிலையே காணப்பட்டது. புலமையும் வறுமையும் இணைந்த வாழ்வே அவர்தம் அடையாளமாக இருந்து வந்தது. அவர்களின் பாடல்கள் அரசர்களின் வள்ளல் தன்மையைப் புகழ்ந்தாலும், அதற்குப் பின்னால் புலவர்களின் வறுமை மறைந்து கிடப்பதை அறிய முடிகின்றது.

## பார்வை நூல்கள்


1. தனிப்பாடல் திரட்டு - கலைச் செல்வி (தொ.ஆ) - மீனாட்சிபதிப்பகம் - மு.ப 1960
2. வாழ்வியல் களஞ்சியம், தொகுதி-14- தமிழ்ப்பல்கலைக் கழகம் : தஞ்சாவூர் - மு.ப:1991
3. புறநானூறு மூலமும் உரையும் - புலியூர்க்கேசி கன் - சாரதா பதிப்பகம் - மு.ப: 2010.
4. பொருநராற்றுப்படை - கி.வ.ஜகந்நாதன், அமுத நிலையம் லிமிடெட், மு.ப : 1985
5. திருக்குறள்- புதிய உரை - பூம்புகார் பதிப்பகம் - பதிப்பு -2010
6. கல்வி உளவியல் - முனைவர் அ. மீனாட்சி சுந்தரம் - காவ்யமாலா பதிப்பகம்.